MAALAI MALAR

8 AUG 2023

PAGE 3

புதுவை பல்கலைக்கழகத்தில்

# முதுநிலை படிப்புக்கு விண்ணப்ப காலக்கெடு நீடிப்பு

புதுச்சேரி, ஆக.8—

புதுவை பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:—

புதுவை பல்கலைக்கழகத்தில் முதுநிலை டிகிரி மற்றும் டிப்ளமோ படிப்பில் சேர விண்ணப்பங்கள் ஆன்லைனில் வரவேற்கப்பட்டன. ஆன்லைனில் பதிவு செய்த மாணவர்கள் அதை முழுமையாக சமர்பிக்காமல் உள்ளனர். இதையடுத்து பல்கலைக்கழக முதுநிலை டிகிரி, டிப்ளமோ படிப்புக்கு விண்ணப்பிக்க வரும் 10—ந் தேதி வரை காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது. கியூட் முதுநிலை தேர்வு எழுதிய மாணவர்கள் பல்கலைக்கழக இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

DINATHANTHI

8 AUG 2023

PAGE 15

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# முதுகலை படிப்புக்கு விண்ணப்பிக்க காலக்கெடு நீட்டிப்பு

புதுச்சேரி, ஆக. 8-

புதுச்சேரி பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

தேசிய தேர்வு முகமை பல்கலைக்கழகங்களில் சேருவதற்கான நுழைவுத் தேர்வு (கியூட்) முடிவுகளை வெளியிட்டுள்ளது. இந்த தேர்வுகளை எழுதிய தகுதிவாய்ந்தவர்கள் புதுவை பல்கலைக்கழகத்தில் உள்ள முதுகலை பட்ட படிப்பு மற்றும் முதுகலை பட்டய படிப்புகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

இதற்கான ஆன்லைன் விண்ணப்பம் https://www.pondiuni.edu.in/admissions-2023-24 என்ற முகவரியில் உள்ளது. புதுவை பல்கலைக்கழகத்தில் உள்ள பாடப்பிரிவுகள் குறித்த விவரங்களை பல்கலைக்கழக கையேட்டை பார்த்து தெரிந்து விண்ணப்பிக்கலாம். இதற்கு விண்ணப்பிக்க கடந்த 31-ந் தேதி கடைசிநாள் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்த நிலையில் விண்ணப்பிக்கும் காலக்கெடு 10-ந் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

DINAKARAN

8 AUG 2023

PAGE 13

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# முதுகலை படிப்புகளுக்கு விண்ணப்பிக்கும் தேதி நீடிப்பு

**புதுச்சேரி, ஆக 8:** புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டப்படிப்புகள் மற்றும் முதுகலை டிப்ளமோ படிப்புகளுக்கு விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள் வரும் 10ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் உதவி பதிவாளர் (மக்கள் தொடர்பு) மகேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

பல்கலைக்கழக பொது நுழைவுத் தேர்வு (கியூட் - பிஜி) தேர்வு முடிவுகளின் அடிப்படையில் புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் பல்வேறு முதுகலை படிப்புகள் மற்றும் முதுகலை டிப்ளோ படிப்புகளில் சேர்வதற்கான ஆன்லைன் விண்ணப்ப படிவத்தை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் வரும் 10ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. முன்னதாக பதிவு செய்து முடிக்க முடியாத அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும், புதிதாக விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரர்களுக்கும் இந்த வாய்ப்பு வழங்கப்படுகிறது.

புதுச்சேரி பல்கலைக்கழகத்திற்கு தேவையான கியூட் (பிஜி) - 2023 இல் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்கள் 2023-24ம் கல்வியாண்டில் வழங்கப்படும் பல்வேறு முதுகலை பட்டப்படிப்பு மற்றும் முதுகலை பட்டயப் படிப்புகளுக்கான சேர்க்கைக்கு *https://www.pondiuni.edu.in/admissions-2023-24/* என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம். முதுகலை பட்டப்படிப்புக்கான தகுதி அளவுகோல்களுக்கு பல்கலைக்கழக இணையதளத்தில் உள்ள தகவல் சிற்றேட்டையும் பார்க்கவும். மேலும், சமீபத்திய தகவல்களுக்கு விண்ணப்பதாரர்கள் பல்கலைக்கழக இணையதளத்தை தவறாமல் பார்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

DINAMALAR

8 AUG 2023

PAGE 1

# முதுநிலை படிப்புகளுக்கு விண்ணப்பம் வரவேற்பு

**புதுச்சேரி, ஆக. 8–**

புதுச்சேரி பல்கலையில் முதுநிலை டிகிரி மற்றும் டிப்ளமோ படிப்புகளுக்கு விண்ணப்பிக்க வரும் 10ம் தேதி வரை காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து பல்கலைக்கழக மக்கள் தொடர்பு அதிகாரி மகேஷ் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

புதுச்சேரி பல்கலையில் முதுநிலை டிகிரி மற்றும் டிப்ளமோ படிப்பில் சேர விண்ணப்பங்கள் ஆன்–லைனில் வரவேற்கப்பட்டன. ஆன்–லைனில் பதிவு செய்த மாணவர்கள் அதனை முழுமையாக சமர்பிக்காமல் உள்ளனர்.

இதனையடுத்து பல்கலைக்கழக முதுநிலை டிகிரி மற்றும் டிப்ளமோ படிப்புகளுக்கு விண்ணப்பிக்க வரும் 10ம் தேதி வரை காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது.

கியூட்முதுநிலை தேர்வு எழுதிய மாணவர்கள் https://www.pondiuni.edu.in என்ற இணையதளத்தில் விண்ணப்பம், இதர தகுதி விபரங்களை தெரிந்து கொள்ளலாம்.

இவ்வாறு செய்திகுறிப்பில் கூறப்பட்டுள்ளது.